**செ. கு. எண்: 025** **நாள்: 18.02.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 18.2.2019</u>

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், காசிபாளையம் கிராமத்திலிருந்து, தனியார் வாகனத்தில் ஏற்றி வந்த வெடி பொருட்கள் வெடித்ததில், வெடி பொருட்களை இறக்கி வைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த திரு.சுகுமார் என்பவரின் மகன் திரு. கார்த்திக் ராஜா, திரு. துரைராஜ் என்பவரின் மகன் திரு. செந்தூர் பாண்டியன் மற்றும் திரு. பெருமாள் என்பவரின் மகன் திரு. முருகன் ஆகிய மூன்று நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், மதுசூதனபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பங்கிராஜ் என்பவரின் மகன் திரு. சகாயம் என்பவர் கடலில் குளித்துக் கொண்டிருக்கும் போது, எதிர்பாராத விதமாக கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

இராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் வட்டம், தங்கச்சிமடம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் என்பவரின் மகன் திரு. ஜெபனேஷ் என்பவர் கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது, எதிர்பாராத விதமாக கடலில் விழுந்து, நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆலங்காயம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கங்கை அமரன் என்பவரின் மகள் செல்வி மகாலட்சுமி என்பவர், புதியதாக கட்டப்பட்டு வரும் கட்டடத்திலிருந்து தவறி விழுந்ததில், உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், சேர்ந்தமங்கலம் மற்றும் நயினாகரம் கிராமங்களைச் சேர்ந்த திரு. கோவிந்தராஜ் என்பவரின் மகன் சிறுவன் கிரண் மற்றும் திரு. வெங்கடாச்சலம் என்பவரின் மகன் செல்வன் கோபி ஆகிய இருவரும் பட்டாக்குளத்தில் குளிக்கச் சென்ற போது, நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

எதிர்பாராத விதமாக உயிரிழந்த மேற்கண்ட 8 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட சம்பவங்களில் **உயிரிழந்த 8 நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**